# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 306/2023 நாள்.10.06.2026

### PW1- திருமதி.ஹமீதாபானு , க/பெ. திரு. ஜாபர்அலி

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

என்ன பரிகாரம் கோரி நான் வழக்கு போட்டுள்ளேன் என்றால் இடத்தில் தொல்லை செய்வதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து என் பெயரிலும் என் கணவர் பெயரிலும் கிரையம் உள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்து எப்போது வாங்கபட்டது என்றால் 12, 13 வருடம் இருக்கும். பிரதிவாதி குருசாமியை எனக்கும், என் கணவருக்கும் தெரியும் என்றால் ஆமாம். ஹஸ்மதா ஜான் 2வது வாதி எனது மகள் என்றால் ஆமாம். அவருக்கு திருமணமாகிவிட்டது என்றால் ஆமாம். எந்த ஊரில் வசிக்கிறார் என்றால் முகம்மதுபந்தர் என்ற ஊரில் வசிக்கிறார். முகமதுபந்தருக்கும் கண்டியூருக்கும் எவ்வளவு தூரம் என்றால் அரை கி.மீட்டர் இருக்கும். என் கணவர் தற்போதும் உயிருடன் உள்ளார் என்றால் ஆமாம். நான் குடியிருக்கும் இடம் தாவா சொத்து என்றால் ஆமாம். என் கணவரும் அதே வீட்டில் வசிக்கிறார் என்றால் இல்லை வெளியூருக்கு போனவர் வரவில்லை. எந்த வருடம் போனார் என்றால் கொரானாவுக்கு முன்பாக. நானும் என் கணவரும் சேர்ந்துதான் தாவா சொத்து சம்மந்தமாக 3.12.2018 அன்று பிரதிவாதிக்கு ஒரு பெந்தக பத்திரமும், கிரைய ஒப்பந்தமும் எழுதிகொடுத்தோம் என்றால் சரிதான். பெந்தம் 10 லட்சத்திற்கு எழுதினோமா என்றால் தெரியாது. பதிவு செய்யபட்ட பெந்தகம் என்றால் ஆமாம். கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யபடாத ஒன்று என்றால் ஆமாம். வாங்கிய கடனை 6 மாதத்தில் திருப்பி கொடுத்துவிடுவேன் என்று உறுதியளித்துதான் வாங்கினோமா என்றால் எனக்கு தெரியவில்லை. கிரைய ஒப்பந்தத்திற்கான தொகை ரூபாய் 35லட்சம் என்று கண்டு எழுதபட்டதா என்றால் எனக்கு தெரியாது. நானும் என் கணவரும் மொத்தம் சேர்ந்து வாங்கிய ரூபாய் 35 லட்சம் என்றால் சரியல்ல. 35 லட்சத்தை என்னால் கொடுக்க முடியாத பட்சத்தில் பிரதிவாதிக்கு இடத்தை எழுதி கொடுப்பதாக உறுதியளித்துதான் 3.12.2018 தேதியிட்ட உறுதிமொழி ஆவணம் எழுதிகொடுத்தோம் என்றால் சரியல்ல.ஒப்புகொண்டபடி என்னையும் என் கணவரையும் அணுகி கிரையபத்திரம் செய்துகொடுக்க சொல்லி பிரதிவாதி கேட்டார் என்றால் சரியல்ல. எனமீதும் என் கணவர் மீதும் கிரைய பத்திரம் பதிவு செய்து தரச்சொல்லி ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி பிரதிவாதி நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் எனக்கும், என் கணவருக்கும் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது என்றால் சரியல்ல. அந்த

வழக்கில் நாங்கள் ஆஜராகாததால் எங்களுக்கு எதிராக ஒருதலைபட்ச தீர்ப்பு ஏற்பட்டுவிட்டது என்று சொன்னால் எனக்கு தெரியாது. ஒருதலைபட்ச தீர்ப்பை ரத்து செய்ய எனது வழக்கறிஞர் மூலம் மனுதாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி எங்கள் வீட்டிற்கு வந்து என்னிடம் எப்போது பேசினார் என்றால் 6 மாதங்கள் முன்பு வந்தார். அவ்வாறு வரும்போது அவருடன் யார் வந்தார் என்றால் ஒருவர் மட்டும் வந்தார். வழக்கு தாக்கல் செய்வதற்கு அவ்வாறு பிரதிவாதி வந்ததுதான் காரணமாக கூறுகிறேனா என்றால் ஆமாம். அவ்வாறு வந்ததற்கு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை, ஏனென்றால் சாதாரணமாக பேசத்தான் வந்தார். அவர் பணம் கேட்டதற்கு என்னால் பணமாக கொடுக்கமுடியாது என்றும், இடத்தை கொடுத்துவிடுகிறேன் விற்று எடுத்துகொள்ளுங்கள் என்று கூறினேன். வழக்கு தாக்கல் செய்ய எந்தவித வழக்குமூலமும் இல்லாமல் தாக்கல் செய்துள்ளதால் எங்களுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்று என்றால் சரியல்ல. எங்கள் மீது ஏற்பட்டுள்ள ஒருதலைபட்ச தீர்ப்பை பிரதிவாதி நிறைவேற்றாமல் இருக்க நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.06.10 17:40:36 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.**